**විද්‍යා, තාක්ෂණය සහ ඩිජිටල් පරිණාමනය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාව**

**වෙත යොමු කරන ලද**

**පෞද්ගලික දත්ත ආරක්ෂණ (සංශෝධන) පනත් කෙටුම්පත**

**සම්බන්ධයෙන්**

**විද්‍යා, තාක්ෂණය සහ ඩිජිටල් පරිණාමනය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ වාර්තාව**

**පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද්දේ**

**විද්‍යා, තාක්ෂණය සහ ඩිජිටල් පරිණාමනය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ සභාපති**

**ගරු (වෛද්‍ය) ජනක සේනාරත්න මහතා, පා.ම. විසිනි**

**2025 ජූනි මස 03 වැනි අඟහරුවාදා**

---

**விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பரிணாமம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு**

**ஆற்றுப்படுத்தப்பட்ட**

**தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம்**

**மீதான**

**விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பரிணாமம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின்**

**அறிக்கை**

**விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பரிணாமம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின்**

**தவிசாளர்**

**கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன, பா.உ. அவர்களால்**

**பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.**

**2025 யூன் 03, செவ்வாய்க்கிழமை**

---

**Report of the**

**Sectoral Oversight Committee on Science, Technology and Digital Transformation**

**on**

**Personal Data Protection (Amendment) Bill**

**referred to**

**Sectoral Oversight Committee on Science, Technology and Digital Transformation**

**Presented to Parliament by**

**Hon. (Dr.) Janaka Senarathna, M.P.**

**Chair of the**

**Sectoral Oversight Committee on Science, Technology and Digital Transformation**

**Tuesday, 03 June 2025**

## குழுவின் அறிக்கை

2025 மே மாதம் 27ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஒன்றுகூடிய விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பரிணாமம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பின்வரும் சட்டமூலம் தொடர்பில் ஆராயப்பட்டது.

- தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம்
  (2025 மே மாதம் 08 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பரிணாமம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.)

**கலந்துகொண்ட குழு உறுப்பினர்கள்:**

கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன, பா.உ (தவிசாளர்)

கௌரவ சத்துரங்க அபேசிங்க, பா.உ

கௌரவ லசித் பாஷன கமகே, பா.உ

கௌரவ சட்டத்தரணி (திருமதி) ஹசாரா லியனகே, பா.உ

கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி, பா.உ

**குழுவின் செயலாளர்**

திருமதி. சூலா ஹேரத், உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)

**கலந்துகொண்ட உத்தியோகத்தர்கள்**

**தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை**

கலாநிதி கனிஷ்க கருணாசேன, பணிப்பாளர் நாயகம் (ப.க)

**சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களம்**

செல்வி அபிகேல் சூரியகுமார் ஜயகொடி, அரச சட்டவாதி

**சட்டவரைஞர் திணைக்களம்**

திருமதி யூ.எம்.சபுகொட்டன, உதவிச் சட்டவரைஞர்

**அறிமுகம்**

தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துதல், ஒழுங்குபடுத்துதல், தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தல் தொடர்பாகத் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளை அடையாளம் காணல், பலப்படுத்துதல், தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையை தாபித்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய ஏற்பாடுகளைச் செய்தல் என்பன 2022ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கமாகும். 2025.05.08 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலத்தின் ஊடாக முதன்மைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற போது அவசியமெனக் கருத்தப்படும் திருத்தங்கள், எதிர்காலத்தில் தரவுகள் தொடர்பில் தோன்றக்கூடிய நிலைமைகளுக்கு முகங்கொடுக்கக்கூடியவாறு அதிகாரத்தை

அமுலாக்குவதற்கானதொரு நிறுவனம் இருக்க வேண்டியதன் முக்கியத்தவத்தை அடையாளம் கண்டு, அரச மற்றும் தனியார் ஆகிய இரு பிரிவுகளுக்கும் டிஜிட்டல் மூலோபாயங்களை பின்பற்றுவதற்கு சமமானவகையில் ஒத்துழைப்பை வழங்குவதும் தரவு விடயப்பரப்புக்களின் உரிமைகளை அர்த்தமுள்ள வகையில் கையாள்வதற்கு பரந்தளவில் உதவியாக அமையும்.

<u>குழுவின் அவதானிப்புக்கள்</u>

1. 2022இல் சட்டம் நிறைவேற்றப்பட்ட போதிலும், நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இச்சட்டமானது இதுவரையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் இந்தத் திருத்தங்களூடாக குறித்த தடைகளை நீக்குவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றதென்பது.

2. சட்ட அமுலாக்கத் திகதி பற்றிய ஏற்பாடுகளை நீக்கி அமைச்சருக்கு சட்டத்தை கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கான திகதிகளை குறித்துரைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதென்பது.

3. தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை (DPA) தாபிக்கப்பட்டுள்ள போதிலும், செயற்படுவதற்கு அவசியமான பணியாட்டொகுதியினரை (சுமார் 42 பேர்) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதோடு அதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், அது சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதியும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையால் எதிர்வரும் 3-4 மாதங்களுக்குள் பணியாட்தொகுதியினரை பெற்றுக்கொள்ள முடியுமென்பது.

4. தரவுப் பாதுகாப்பு அதிகாரசபைக்கு, வழிகாட்டல்களைத் தயாரிப்பதற்கான அதிகாரம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தற்போதைக்கு தரவு முகாமைத்துவத் திட்டங்கள் தொடர்பில் மாத்திரம் வழிகாட்டல்களைத் தயாரிப்பதற்கான அதிகாரம் இருப்பதோடு, திருத்தங்களின் பின்னர் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயம் தொடர்பிலும் வழிகாட்டல்களைத் தயாரிப்பதற்கான அதிகாரம் அதிகாரசபைக்கு கிடைக்கின்றதென்பது.

5. அரச கூட்டுத்தாபனமொன்றினால் தரவுகள் செய்முறைப்படுத்தப்படுகின்ற போது தரவுப் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை பெயர் குறிப்பதன் அல்லது நியமிப்பதன் தேவைப்பாடு இச்சட்டத்தின் மூலம் அகற்றப்பட்டுள்ளமைக்கான காரணம் யாதெனில், தரவுப் பாதுகாப்பு உத்தியோகத்தர் சட்டத்தின் கட்டுப்பாட்டாளர் (Controller) மற்றும் பகிரங்க அதிகார சபை (Public Authority) ஆகிய வரைவிலக்கணங்களின் கீழ் ஏற்கனவே இவ்விடயம் உள்ளடங்கியிருப்பதால் நாடுகளின் எல்லைகளூடாக தரவுகளைப் பரிமாறிக்கொள்ளும் போது தனியார் துறையுடன் (உதா: வங்கிகள்) சமமான வகையில் பணியாற்றுவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கின்றதென்பது.

6. அதிகார சபைக்கு எழுத்துமூல கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் மாத்திரமே தனிப்பட்ட தரவு தாக்க மதிப்பீடொன்றை (DPIA) மேற்கொள்ள முடியுமென்பதனை அறிமுகப்படுத்துவதனூடாக அதிகாரசபையின் அவசியமற்ற செயற்பாடுகள் மற்றும் தாமதங்களைக் குறைத்துக்கொள்ள முடியுமென்பது.

7. பொது அதிகாரமுடைய தரப்பாக கட்டுப்பாட்டாளர் அல்லது தரவு செய்முறைப்படுத்துபவர் ஒருவரால், (5) ஆம் உப பிரிவின் கீழ் விதிக்கப்படக்கூடிய தனிப்பட்ட தரவு வகைகள் தொடர்பில் நாடுகளின் எல்லைகளூடாக தரவு நகர்வுகளில் ஈடுபடக்கூடாதென்பது.

**குழுவின் தீர்மானங்கள்**

ஆராய்ந்து பார்த்ததன் பின்னர், தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் தொடர்பில் குழு உடன்பட்டதோடு, அது தொடர்பில் தயாரிக்கப்பட்ட குழுவின் இவ்வறிக்கையை குழுவின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன அவர்களினால் 2025 யூன் மாதம் 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.